FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348087

1. District : Krishnagiri மாவட்டம் PS: VG AC காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 10/AC/2026 மு.த.அ. எண் Date: 04.08.2026 நாள்

2. (i) Act சட்டம்: The PC Act, 1988. as Sections பிரிவுகள்: 7(a) & 7(b) & 12.

(ii) Act சட்டம்: amended in 2018. Sections பிரிவுகள்: 7(a) r/w 12.

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 04.08.2026 Date to : நாள் வரை before 05.00 hrs.

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.08.2026 Time : நேரம் 16.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer Typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 55 KM west.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Transport Department Checkpost [Inward] Zuzuvadi, Hosur.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. G. Sakthivel (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S.V. Govindasamy

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age-51 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -

Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம் -

(f) Occupation : தொழில் PA To SDRO (g) Address : முகவரி O/o the Special District Revenue officer (L.A), State Highways, Krishnagiri.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tmt. T. Sumathi, Motor Vehicle Inspector (N.T), Transport Department Check Post (Inward), Zuzuvadi, Hosur.
2) Tr. N. Sunil Kumar, Age-49, S/o Nagendiran, D.No. 5/1329-A1, TAMS Colony, Viruppatchipuram, Elakkiyampatti, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved : -
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: -
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted :

Separate Sheets enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
04.08.26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

04.08.2026 at 17.10 hrs

Name: பெயர் A.T. Jaikumar,
Rank: நிலை .....No. எண் .....
Deputy Superintendent of Police,
VAC, Krishnagiri.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 10/AC/2026 u/s 7(a) & 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண். 12-ன் தொடர்ச்சி.

இன்று 04.08.2026-ம் தேதி 16.00 மணிக்குக் காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது, திரு.G.சக்திவேல், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்: திரு.G.சக்திவேல், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர்: காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, கிருஷ்ணகிரி. ஐயா, நான் கிருஷ்ணகிரி, மாநில நெடுஞ்சாலைகள் துறை, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ) அலுவலகத்தில் நேர்முக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை Roc.No. 1096/2026/A1, நாள்: 07.07.2026-ன்படி சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக என்னை நியமித்திருந்தார். எனக்கு கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் ஜுஜுவாடி போக்குவரத்து உள்வருகை சோதனைச்சாவடியில் பணிபுரியும் அலுவலர்கள் நேரடியாகவும் மற்றும் தனி நபர்கள் மூலமாகவும் வெளிமாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்குள் நுழையும் வாகன ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாகப் பணம் பெற்றுக் கொண்டு, தற்காலிக அனுமதி சீட்டு வழங்குவதாகவும், நடை சீட்டுகளில் முத்திரை பதிப்பதாகவும், விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அதன்பேரில் இணக்கக் கட்டணம் விதிக்காமல் அனுப்பி விடுவதாகவும் கிடைத்த இரகசிய தகவலின் பேரில், கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினருடன் ஓசூர் ஜுஜுவாடி போக்குவரத்து உள்வருகை சோதனைச்சாவடிக்கு வந்து, காலை 05.00 மணிக்கு திடீர் ஆய்வு மேற்கொண்டேன். சோதனைச்சாவடி அலுவலகத்தில் நுழையும்போது, பெங்களூரிலிருந்து ஓசூர் நோக்கி வரும் வாகனங்களைச் சோதனைச்சாவடியில் நிறுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த நபரிடம் விசாரிக்க: திரு.N.சுனில்குமார், த/பெ நாகேந்திரன், க.எண். 5/1329-A1, TAMS காலனி, விருப்பாட்சிபுரம், இலக்கியம்பட்டி, தருமபுரி என்றும்; தான் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.T.சுமதி அவர்களின் அறிவுறுத்தலின்படி

வாகனங்களை நிறுத்தும் பணியைச் செய்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். நானும், காவல் துணை கண்காணிப்பாளரும் திரு.N.சுனில்குமார் அவர்களை அழைத்துக் கொண்டு சோதனைச்சாவடியில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு வந்தோம். பின்னர், நானும் காவல் துணை கண்காணிப்பாளரும், மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.T.சுமதி அவர்களிடம் எங்களை அறிமுகம் செய்துகொண்டு, சோதனைச்சாவடியில் திடீர் ஆய்வு செய்ய வந்திருக்கும் விவரத்தை தெரிவித்தேன். பின்னர், மோட்டார் வாகன ஆய்வாளரிடம் விசாரிக்க, 03.08.2026-ம் தேதி இரவு 08.00 மணி முதல் 04.08.2026-ம் தேதி காலை 08.00 மணி வரை இரவு பணியில் இருந்துவருவதாகவும், தன்னுடன் உதவியாளர் திருமதி.K.பவித்ரா, மற்றும் அலுவலக உதவியாளர் திருமதி.R.மகாலட்சுமி, பணியில் உள்ளதாகவும் தெரிவித்தார். பின்னர், உதவியாளர் திருமதி.K.பவித்ரா அவர்களிடம் அரசு கணக்கில் வசூலான தொகை குறித்து கேட்க, இரவு 08.00 மணி முதல் காலை 05.00 மணி வரை பல்வேறு இனங்களில் வசூலான தொகை குறித்த வசூல் அட்டவணையை Vahan மற்றும் Border Tax Login-லிருந்து அச்சுப் பிரதியை எடுத்து ஆஜர் செய்து, 03.08.2026-ம் தேதி இரவு 08.00 மணி முதல் 04.08.2026-ம் தேதி காலை 05.00 மணி வரை அரசு கணக்கில்: வரி ரூ.3,04,313/-, கட்டணம் ரூ.300/-, இணக்கக் கட்டணம் ரூ.22,200/-, சேவைக் கட்டணம் ரூ.4,320/-, 1% வரி ரூ.3,064/- ஆகமொத்தம் ரூ.3,34,197/- வசூல்செய்துள்ளதாகத் தெரிவித்து, அவர் அருகில் வைத்திருந்த பச்சைநிற பிளாஸ்டிக் பாக்ஸில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். நான் அதை எண்ணிப்பார்க்கையில் பணம் ரூ.3,34,197/- சரியாக இருந்தது. பின்னர் நான், அரசு கணக்கில் வேறு ஏதாவது பணம் உள்ளதா என்று மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்டதற்கு, 03.08.2026-ம் தேதி காலை 08.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை பணியில் இருந்த உதவியாளர் திரு.G.சுரேஷ்குமார் ரூ.3,93,243/- வசூல் செய்துள்ளதாக தெரிவித்து, பண பதிவேட்டினை எடுத்து ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில், வரி ரூ3,81,328/- கட்டணம் ரூ.1,900/-, இணக்கக் கட்டணம் ரூ.1,000/-, சேவைக் கட்டணம் ரூ.5,170/- மற்றும் 1% வரி ரூ.3,845/- என மொத்தம் ரூ.3,93,243/- வசூல் செய்யப்பட்ட விவரம் பதிவுசெய்யப்பட்டிருந்தது. பின்னர், மோட்டார் வாகன ஆய்வாளர் எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்க்கையில் பணம் ரூ.3,93,243/- சரியாக இருந்தது. அந்தப் பணத்தை திருமதி.T.சுமதி வசம் ஒப்படைத்து, அரசு கணக்கில் செலுத்த அறிவுறுத்தப்பட்டது. பின்னர், மோட்டார்

வாகன ஆய்வாளரின் இருக்கைக்கு முன் இருந்த மேஜையின் எதிர்புறம் இருந்த அட்டை பெட்டியினுள்: ஐநூறு ரூபாய் தாள்கள் 122 எண்ணிக்கையில் ரூ.61,000/-, இருநூறு ரூபாய் தாள்கள் 4 எண்ணிக்கையில் ரூ.800/-, மற்றும் நூறு ரூபாய் தாள்கள் 25 எண்ணிக்கையில் ரூ.2,500/- என மொத்தம் ரூ.64,300/- இருந்தது. அந்தப் பணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.T.சுமதி எந்த விளக்கமும் அளிக்காததால், வாகன ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக பெற்ற பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ரூ.64,300/- செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. அந்தப் பணத்தைப் பற்றி அவரிடம் கேட்க, அது வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்ததற்காகவும், விதிமீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் சோதனைச்சாவடியில் பணிபுரியும் அலுவலர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணம் என்று தெரிவித்தார். மோட்டார் வாகன ஆய்வாளர் அறையின் தெற்குப் பகுதியில், கிழக்கிலிருந்து மேற்காகத் தரையிலிருந்து சுமார் 2 அடி உயரத்தில் பிளைவுட்டால் ஆன 20 சிறு டிராயர்களில், முதலாவது டிராயரில்: ஐநூறு ரூபாய் தாள்கள் 26 எண்ணிக்கையில் ரூ.13,000/-, இருநூறு ரூபாய் தாள்கள் 2 எண்ணிக்கையில் ரூ.400/-, மற்றும் நூறு ரூபாய் தாள் ஒன்று என மொத்தம் ரூ.13,500/- இருந்தது. அந்தத் தொகை குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.T.சுமதி அவர்களிடம் கேட்டதற்கு, அவர் இன்றைய தினம் வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்தமைக்காகவும், விதிமீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் வாகன ஓட்டுநர்கள் கொடுத்த பணம் என்று தெரிவித்தார். எனவே, அந்த பணம் ரூ.13,500/- விசாரணைக்காகச் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. பின்னர், மோட்டார் வாகன ஆய்வாளரின் ஓய்வு அறையில் தெற்குபகுதியில் இருந்த கணினி மேஜையின் மீதிருந்த பழைய "hp" பிரிண்டருக்கு உள்ளே, ஐநூறு ரூபாய் தாள்கள் 100 எண்ணிக்கையில் ரூ.50,000/-, மற்றும் ஐநூறு ரூபாய் தாள்கள் 50 எண்ணிக்கையில் ரூ.25,000/- என மொத்தம் ரூ.75,000/- இருந்தது. அந்தப் பணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.T.சுமதி அவர்களிடம் கேட்டதற்கு, அவர் 03.08.2026-ம் தேதி இரவுப் பணியில் வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்ததற்காகவும், விதிமீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் வாகன ஓட்டுநர்கள் கையூட்டாகக் கொடுத்தப்

பணம் என்று கூறியதால், மேற்படி பணம் ரூ.75,000/- விசாரணைக்காகச் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. பின்னர், திரு.N.சுனில்குமார் அவர்களிடம் விசாரித்தபோது, தான் வெளிமாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்குள் நுழையும் வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர் அறிவுரைப்படி சோதனைச்சாவடியில் நிறுத்தி, வாகன ஓட்டுநர்களிடம் ஆவணங்களை எடுத்துக் கொண்டு மோட்டார் வாகன ஆய்வாளரிடம் காண்பித்து வரும்படி அனுப்பிவைப்பதாகக் கூறினார். அதற்காக, மோட்டார் வாகன ஆய்வாளர் தினசரி கூலியாக ரூ.1,500/- தருவதாகத் தெரிவித்தார். பின்னர், திரு.N.சுனில்குமார் என்பவரிடம் சோதனை மேற்கொண்டபோது, தனது வலது முன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.50,000/-ஐ எடுத்து ஆஜர் செய்து, மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.T.சுமதி என்னிடம் கொடுத்து வைத்திருப்பதாகவும், அலுவல் முடிந்து செல்லும்போது பணத்தை வாங்கிக் கொள்வதாகவும் தெரிவித்தார். மேற்படி, பணம் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.T.சுமதி அவர்கள் வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்ததற்காகவும், விதிமீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும், வாகன ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாகப் பெற்ற பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் விசாரணைக்காகச் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது உள்வழி சோதனைச்சாவடியில் பராமரிக்கப்பட்டு வரும் பண கையிருப்பு பதிவேட்டினைப் பார்வையிட்டபோது ரூ.2,02,800/- கணக்கில் வராமல் இருந்த பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது, ஓசூர் ஜுஜுவாடி போக்குவரத்து உள்வருகை சோதனைச்சாவடியில் பணிபுரியும் அலுவலர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.2,02,800/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.T.சுமதி, திரு.N.சுனில்குமார், திரு.P.வெற்றிவேல், திரு.K.முருகன், மற்றும் திரு.R.ஜெயக்குமார் ஆகியோரின் வாக்குமூலங்கள் திடீர் ஆய்வின்போது தயார்செய்த செயல்முறை நடவடிக்கையுடன் ஆஜர்படுத்துகிறேன். ஓசூர் ஜுஜுவாடி போக்குவரத்து உள்வருகை சோதனைச்சாவடியில் பணிபுரியும் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.T.சுமதி, மற்றும் திரு.N.சுனில்குமார் ஆகியோர் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம் திரு.G.சக்திவேல்).

மேற்கண்ட புகாரினைப் பெற்று, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, மேற்குச் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுப்படி, கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, குற்ற எண். 10/AC/2026 u/s 7(a) & 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018-ன்படி இன்று 04.08.2026-ம் தேதி 17.00 மணிக்கு வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை மாண்புமிகு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களைச் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

04.08.2026